Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 297 | உள்ளூர் - 26.10.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 297 | வெளியூர் - 27.10.2026 | செவ்வாய்க்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**கேது தசை: 9 கிரகங்களின் பலன்கள்!** | **தமிழகத்தில் 1,146 அப்ரண்டிஸ் பணிகள்!** | **உருவானது "அர்னாப் புயல்"** | **ஸ்டாலினிடம் சீனியர்கள் குமுறல்!**

# ஈரான் மீது தாக்குதல் நடத்த மாட்டோம்; டிரம்ப் திடீர் பல்டி!



வாஷிங்டன், அக். 26–

கடந்த பிப்ரவரி மாதம் அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதலை நடத்தின. ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனி மற்றும் அவரது குடும்பத்தினர் பலர் கொல்லப்பட்டனர். ஈரான் மீதான அமெரிக்காவின் போர் தற்போது தணிந்தாலும், ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது. தொடர்ந்து இரு தரப்பும் மாறி மாறி தாக்குதல்களை நடத்துவதாக மிரட்டி வருகின்றன. இந்நிலையில், புளோரிடா மாகாணத்தில் நடந்த குடியரசுக் கட்சியின் பிரசார கூட்டத்தில் பேசிய டிரம்ப், "அமெரிக்கா உடன் ஒப்பந்தம் செய்யத் தவறினால், ஈரான் மீதான மிகப் பெரிய ராணுவத் தாக்குதலை மீண்டும் நடத்தப்படும்" என அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்தார்.

இன்று (அக்டோபர் 26) ஈரான் மீதான புதிய தாக்குதலை நிராகரித்து உள்ளார். தாக்குதல் எதுவும் நடக்காது என தெளிவுப்படுத்தினார்.

# உலகை அச்சுறுத்தும் ஹவுதிகள்!

# கச்சா எண்ணெய் 110 டாலர்!

# ஹார்முஸ், செங்கடலில் முடக்கம்!

## அமெரிக்கா மௌனம்; சவுதி தவிப்பு!!




வாஷிங்டன், அக். 26–

அமெரிக்கா–ஈரான் போர் பதற்றத்தால் கடந்த ஒன்றரை மாதமாக உலக நாடுகள் கச்சா எண்ணெய் விலை உயர்வைக் கவலையுடன் கவனித்து வருகின்றன.

ஹார்முஸ் நீரிணை வழியாக எண்ணெய் போக்குவரத்து பாதிக்கப்பட்டதால், ஒரு பேரல் கச்சா எண்ணெய் 110 டாலரைத் தாண்டியது. பின்னர் போர் தாக்குதல்கள் குறைந்ததால் விலை சரிந்தது. அப்போது செங்கடல் வழியாகச் சவுதி அரேபியா எண்ணெய் விநியோகத்தைத் தொடர்ந்தது.

தற்போது சவுதி அரேபியாவுக்கும் ஏமனில் செயல்படும் ஹவுதி அமைப்புக்கும் இடையிலான மோதல் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. சவுதியின் எண்ணெய் தளங்கள், கட்டமைப்புகள், விமான நிலையங்கள் குறிவைத்துத் தாக்கப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் செங்கடல் வழி எண்ணெய் ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டு, கச்சா எண்ணெய் விலை மீண்டும் 110 டாலரை எட்டியுள்ளது.

எண்ணெய் கப்பல்கள் தட்டுப்பாடு, ஹார்முஸ் வழித்தடத்தில் கப்பல்கள் முடங்கியது, உலகின் பல சுத்திகரிப்பு ஆலைகள் பாதிக்கப்பட்டது, எரிபொருள் இருப்பு குறைவது ஆகியவை நெருக்கடியை அதிகரிக்கின்றன. விலை உயர்வு தொடரும் என்ற எதிர்பார்ப்பில் முதலீடுகளும் அதிகரிக்கின்றன.

ஈரான் விவகாரத்தில் தலையிட்ட அமெரிக்கா, ஹவுதி விவகாரத்தில் தலையிடத் தயங்குவது சவுதிக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. எண்ணெய் விநியோகம் நீண்டகாலம் பாதிக்கப்பட்டால், எரிபொருள் விலை உயர்ந்து உலகப் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

# முதல்-அமைச்சர் விஜய்யின் பசும்பொன் பயணம் ரத்து?



சென்னை, அக். 26–

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே பசும்பொன்னில் முத்துராமலிங்கத் தேவரின் 119–வது ஜெயந்தி விழா, 64–வது குருபூஜை வருகிற 28, 29, 30 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் பசும்பொன் வருகை தர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனை முன்னிட்டு ஹெலிபேட் தளத்தில் முன்னேற்பாடு பணி நடைபெற்று வருகிறது.

அதே போல தமிழக முதல்–அமைச்சர் விஜய் மற்றும் அமைச்சர்கள், தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜனதா, காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த தலைவர்கள், ஏராளமான பொதுமக்கள் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளனர். இதற்கான முன்னேற்பாடு பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

இந்த நிலையில், உளவுத்துறை, போலீசாரின் எச்சரிக்கையே தொடர்ந்து பசும்பொன் செல்லும் பயணத்தை முதல்–அமைச்சர் விஜய் ரத்து செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து தவெக நிர்வாகிகள் சிலர் கூறியதாவது:–

பசும்பொன்னில், ஆண்டுதோறும் தேவர் குருபூஜை நிகழ்வில், லட்சக்கணக்கில் மக்கள் கூடுவது வழக்கம். அங்கு முதல்–அமைச்சர் செல்லும்போது, கூட்டம் அதிகமாகி, சிறு அசம்பாவிதம் நடந்தாலும், எதிர்க்கட்சிகள் அதை பெரிதாக்கி அரசியல் செய்யக்கூடும். எனவே, பசும்பொன் பயணத்தை தவிர்க்குமாறு, உயர் போலீஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர். உளவுத்துறையும் அதே ஆலோசனையை – வழங்கியுள்ளது. அதை ஏற்று பசும்பொன் பயணத்தை முதல்–அமைச்சர் விஜய் தவிர்த்து உள்ளார். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# அமித் ஷா குறித்து அவதூறு! ராகுலுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி!



புதுடெல்லி, அக். 26–

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குறித்து அவதூறாக பேசியதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மீது தொடுக்கப்பட்ட வழக்கை உத்தர பிரதேச சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2018–இல் கர்நாடக பேரவைத் தேர்தலையொட்டி பெங்களூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, அப்போது பாஜக தேசியத் தலைவராக இருந்த அமித் ஷாவை அவதூறாக பேசியதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பாக, உத்தர பிரதேச மாநிலம், சுல்தான்பூரில் உள்ள எம்.பி. மற்றும் எம்எல்ஏக்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில், ராகுல் மீது பாஜக மூத்த தலைவர் விஜய் மிஸ்ரா அவதூறு வழக்கு தொடுத்தார். இந்த வழக்கில் கடந்த 2023–இல் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, ராகுல் ஜாமீன் பெற்றார்.

விசாரணை நிறைவடைந்த நிலையில், கடந்த அக்.13–ஆம் தேதி நீதிமன்றம் தீர்ப்பளிக்கவிருந்தது. பின்னர், தீர்ப்பு தேதி அக்.26–க்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து சுல்தான்பூர் சிறப்பு நீதிமன்றத்தில் ராகுல் காந்தி இன்று காலை நேரில் ஆஜராகியிருந்த நிலையில், அவருக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய சிறப்பு நீதிமன்றத்தின் கூடுதல் தலைமை நீதிபதி சுபம் வர்மா, ராகுல் காந்தி பேசிய கருத்துகள் அவதூறான தன்மையை கொண்டிருக்கவில்லை என்று தெரிவித்தார்.

# அரசியலுக்கு வருவீர்களா? நடிகர் தனுஷ் மகிழ்ச்சியான பதில்!



சென்னை, அக். 26–

நடிகராக இருந்த விஜய், அரசியலில் நுழைந்து, இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் ஆட்சியைப் பிடித்து முதல்வராகியிருக்கும் நிலையில், அடுத்து நடிகர் தனுஷ் அரசியலில் நுழையப்போகிறார் என்ற யூகங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

தனுஷ் அரசியலுக்கு வருகிறார் என்று அவரது ரசிகர்களும், தவெகவுக்கு எதிரானவர்களும் சமூக வலைத்தளத்தில் கருத்துகளைப் பதிவிட, அவர் வந்தால் அது பற்றி பேசுகிறோம் என அரசியல் கட்சித் தலைவர்கள் பதில் சொல்ல இன்னும் முடிவடையாத விவாதமாகவே இருந்து வருகிறது. சரி, அரசியலுக்கு வருவேன்; இல்லை வர மாட்டேன் என்று தனுஷ் நேரடியாக பதில் சொல்லி இந்த ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்றால் அதுவும் நடக்கவில்லை.

ஆனால், எரியும் ஊகங்களுக்கு நடிகர் தனுஷ் எண்ணெய் ஊற்றி வருகிறார். இந்த ஊகங்கள் தோன்றியதற்குக் காரணமே, நடிகர் தனுஷ், தன்னுடைய ரசிகர் மன்றத்தை நற்பணி இயக்கமாக மாற்றியதுடன் அதன் மூலம் உதவிகளையும் அளித்து வருகிறார்.

இதன்போதுதான், அவர் புதிதாக கட்சி தொடங்கப் போகிறார் அல்லது பிரதான கட்சியில் இணையப் போகிறார் என்று சமூக ஊடகங்களில் பல்வேறு தரப்பினர் கருத்துகள் பதிவிட்டனர். சில கட்சிகளிலிருந்து அவருக்கு நேரடியாகவே அழைப்புகளும் வந்தன.

இந்த ஊகங்கள் ஒருபுறமிருக்க, சென்னை செம்மஞ்சேரியில் ஞாயிற்றுக்கிழமை தனுஷ் தலைமையில் நற்பணி இயக்க மகளிர் அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. சுமார் 3000 பேர் பங்கேற்ற கூட்டத்தில் பங்கேற்ற தனுஷ் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே உரையாற்றிவிட்டு கிளம்பியிருக்கிறார். நிகழ்ச்சிக்கு வந்த பெண்களுக்கு காமாட்சியம்மன் விளக்கு பரிசாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி பற்றி செய்தியாளர்கள் கேட்டதற்கு, நான் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளேன் என்று சொல்லும் வகையில் வெரி ஹேப்பி என்று பதிலளித்துள்ளார். சரி இவரிடம் இப்படியெல்லாம் கேட்டால் ஆகாது, அரசியலுக்கு வருவீர்களா என்று நேரடியாகவே கேட்கப்பட்டது. அதற்கு தனுஷ் கொடுத்த பதில் என்ன தெரியுமா? ஹேப்பி தீபாவளி என்பதுதான்.

ஒன்று அரசியலுக்கு வருவேன், இல்லை தெரியவில்லை, வர மாட்டேன் என ஏதேனம் ஒரு பதிலைத்தான் சொல்ல வேண்டும். ஏன் இந்த பதில் என பலரும் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

இதற்கிடையே, நடிகர் தனுஷ், தன்னுடைய ரசிகர் மன்றத்தை நற்பணி இயக்கமாக மாற்றியதுடன் சமீபமாக பல்வேறு உதவிகளையும் அளித்து வருகிறார். மேலும், அவர் புதிதாக கட்சி தொடங்கப் போகிறார் அல்லது பிரதான கட்சியில் இணையப் போகிறார் என்று சமூக ஊடகங்களில் பல்வேறு தரப்பினர் கருத்துகள் தெரிவித்து வருகின்றனர்.

அதிமுகவுக்கு தனுஷ் வந்தால், அவரை இருகரம் கூப்பி வரவேற்போம் என அதிமுக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜியும் கூறினார்.

இதனிடையே, சென்னை செம்மஞ்சேரியில் இன்று (அக். 25) தனுஷ் தலைமையில் நற்பணி இயக்க மகளிர் அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சுமார் 3,000–க்கும் மேற்பட்ட தனுஷ் ரசிகைகளும் நற்பணி இயக்க நிர்வாகிகளும் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்டோருக்கு சைவ, அசைவ விருந்தும் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பிற்பகல் 3 மணியளவில் நிகழ்ச்சிக்கு வந்த தனுஷ், வெறும் 5 நிமிடங்கள் மட்டுமே பேசியதாகவும், அங்கிருந்தோருக்கு தீபாவளி வாழ்த்துகள் சொல்லிவிட்டு கிளம்பியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், நிகழ்ச்சியில் கலந்துகொண்ட 3,000 பெண்களுக்கு வெள்ளி காமாட்சி விளக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

# கைதாகிறாரா அன்பில் மகேஸ்?





சென்னை, அக். 26–

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் தாக்கல் செய்த முன்ஜாமீன் மனுவை சென்னை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்துள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சியின்போது, தமிழகத்தில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம், பள்ளிகள் தரம் உயர்த்துதல் மற்றும் இதர அரசு அனுமதிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி ரூ.100 கோடிக்கும் மேல் முறைகேடாக பணம் வசூலிக்கப்பட்டதாகப் புகார் எழுந்தது. இது தொடர்பாக முன்னாள் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேசுக்கு எதிராக சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு தொடர்பாக கடந்த செப்டம்பர் 16–ந்தேதி அன்பில் மகேசுக்கு சொந்தமான இடங்களில் மத்திய குற்றப்பிரிவு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர்.

இந்த வழக்கில் முன்ஜாமீன் கோரி அன்பில் மகேஸ் தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு இன்று விசாரணைக்கு வந்தது. இந்த நிலையில் அன்பில் மகேஸ் முன்ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து அன்பில் மகேஸ் கைது செய்யப்படுவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நாடாளுமன்ற வளாகத்தில் தீ விபத்து!



புதுடெல்லி, அக். 26–

நாடாளுமன்றத்தில் உள்ள நார்த் பிளாக்கில் திங்கள்கிழமை காலை சிறிய தீ விபத்து ஏற்பட்டது. நாடாளுமன்றத்தின் நார்த் பிளாக் கட்டடத்தில் மத்திய செயலகம் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையில், நார்த் பிளாக்கில் பகுதியிலிருந்து இன்று காலை கரும்புகை எழுந்தது. இதனைத் தொடர்ந்து, தில்லி தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினருக்கு காலை 11.10 மணியளவில் அளிக்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து 6 வாகனங்களில் நாடாளுமன்ற வளாகத்துக்குச் சென்றனர். காலை 11.25 மணியளவில் நார்த் பிளாக்கில் ஏற்பட்ட தீயை தீயணைப்பு வீரர்கள் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதுதொடர்பாக தில்லி தீயணைப்புத் துறையினர் தெரிவித்ததாவது, "நார்த் பிளாக்கில் ஏற்பட்ட தீ அணைக்கப்பட்டது. கட்டடத்தில் சில பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வந்தது. இதில் சிறிய தீ விபத்து ஏற்பட்டது. உயிர்ச்சேதம் ஏதுமில்லை" எனத் தெரிவிக்கப்பட்டது. மேலும், இந்த விபத்தில் ஆவணங்கள் ஏதேனும் சேதமடைந்ததா என்ற விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 26.10.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஐப்பசி மாதம் 09-ம் தேதி

## வாக்காளர் பட்டியல் நீக்கம் விவகாரம்: தமிழக அரசியலில் வெடிக்கும் சர்ச்சை?




ஜனநாயகத்தின் மிக முக்கியமான அடித்தளமும், சாமானிய குடிமகனின் தலையாய உரிமையும் வாக்களிக்கும் உரிமைதான். அந்த ஜனநாயக உரிமையை உறுதிசெய்வதில் முதல்படியாக விளங்குவது முறையான வாக்காளர் பட்டியல். ஆனால், சமீபகாலமாகத் தமிழகத்தில் வெளியிடப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் திருத்தங்கள் மற்றும் சிறப்பு தீவிர திருத்த முறைகள் (SIR – Special Intensive Revision) தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளும்,லட்சக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் தன்னிச்சையாக நீக்கப்பட்டுள்ளதாக வெளிவரும் தகவல்களும் தமிழக அரசியல் களத்தில் பெருங்கலக்கத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

தேர்தல் ஆணையம் சார்பில் சமீபத்தில் வெளியிடப்பட்ட பட்டியல்களில், முன்னறிவிப்பின்றி லட்சக்கணக்கான உண்மையான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகக் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளன. மேலும், இந்தத் தொழில்நுட்ப முறைகேடுகளுக்கும், தரவு மேலாண்மை குளறுபடிகளுக்கும் தேர்தல் ஆணையத்தின் "ECINET" மென்பொருள் மற்றும் போதிய வெளிப்படைத்தன்மையற்ற நடவடிக்கைகளே காரணம் என அரசியல் தலைவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். "எங்கள் வாக்குகள் எங்கே போகின்றன?", "எங்களின் ஜனநாயக உரிமை எங்கே பறிபோகிறது?" என்ற கேள்விகள் இன்று சாதாரண குடிமக்களின் மனங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளன.

தேர்தல் ஆணையம் என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இயங்கும் ஒரு சுதந்திரமான அமைப்பு. அது எந்தவொரு அரசியல் அழுத்தத்திற்கும், தொழில்நுட்பக் குளறுபடிகளுக்கும் ஆளாகாமல், முற்றிலும் நடுநிலையோடு இயங்க வேண்டியது அவசியம். லட்சக்கணக்கான பெயர்கள் நீக்கப்படும்போது, அதற்கான தெளிவான காரணங்கள், முன் அறிவிப்புகள் மற்றும் மேல்முறையீடு செய்வதற்கான எளிய வழிமுறைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.ஆனால், கள நிலவரத்திலோ, பல ஆண்டுகள் தொடர்ந்து வாக்களித்து வந்த பல மூத்த குடிமக்களும், இளைஞர்களும் தங்களின் பெயர்கள் பட்டியலில் இல்லை என்பதை அறிந்து அதிர்ச்சியடையும் சூழலே நிலவுகிறது.

ஒரு பக்கம், பெயர்களைச் சேர்க்கவும் திருத்தங்கள் செய்யவும் அவகாசம் அளிக்கப்பட்டதாகத் தேர்தல் ஆணையம் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டாலும், களமட்டத்தில் அது எந்த அளவுக்குச் சாதாரண மக்களைச் சென்றடைந்தது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. குறிப்பாக கிராமப்புற மக்களும், கணினி அறிவு குறைவாக உள்ள சாமானியர்களும் தங்களின் பெயர்கள் நீக்கப்பட்டதை உடனடியாக அறிய முடிவதில்லை. தேர்தல் தேதி நெருங்கும் வேளையில் அல்லது தேர்தல் நாளில் வாக்களிக்கும் மையத்திற்குச் செல்லும்போதுதான் இந்தத் தவறு வெளிச்சத்திற்கு வருகிறது. இது வாக்காளர்களின் உரிமையைப் பறிப்பதற்குச் சமமான செயலாகும்.

காங்கிரஸ் மற்றும் பிற எதிர்க்கட்சிகள் எழுப்பியுள்ள இந்தக் குற்றச்சாட்டுகளைத் தேர்தல் ஆணையம் வெறுமனே ஒரு அரசியல் விமர்சனமாகப் பார்த்து ஒதுக்கிவிட முடியாது. மக்கள் மத்தியில் தேர்தல் அமைப்பின் மீதான நம்பிக்கையைத் தக்கவைக்க வேண்டியது ஆணையத்தின் முதன்மை கடமையாகும். "ECINET" போன்ற மென்பொருள் பயன்பாடுகளிலும், தரவு சரிபார்ப்பு முறைகளிலும் உள்ள குறைபாடுகளை உடனடியாகக் களைந்து, அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளிப்படையான தணிக்கை (Data Audit) நடத்தப்பட வேண்டும்.

நீக்கப்பட்ட வாக்காளர்களின் விவரங்களை உடனடியாகப் பகுதிவாரியாகவும், வாக்குச்சாவடி வாரியாகவும் வெளிப்படையாக வெளியிட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் பெயர்களை மீண்டும் சேர்க்க ஏதுவாக சிறப்பு முகாம்களையும், அவகாசத்தையும் ஆணையம் போர்க்கால அடிப்படையில் வழங்க வேண்டும்.

ஜனநாயகம் என்பது வெறும் வாக்களிப்பது மட்டுமல்ல; ஒவ்வொரு தகுதியுள்ள குடிமகனின் வாக்கும் எவ்வித முறைகேடான இடையூறுமின்றி பதிவு செய்யப்படுவதை உறுதிசெய்வதே உண்மையான ஜனநாயகம். தேர்தல் ஆணையம் உடனடியாக தலையிட்டு, இந்த சந்தேக மேகங்களைக் கலைத்து, வாக்காளர் பட்டியலின் நம்பகத்தன்மையை மீட்டெடுக்க வேண்டும் என்பதே 'மதுரை மணி'யின் தலையங்கக் கோரிக்கையாகும்!




கனமழை காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு 26.10.26 விடுமுறை என மாவட்ட ஆட்சித்தலைவர் மா சிவகுரு பிரபாகரன் அறிவித்துள்ளார்.

## சவுதி இந்தியர்களுக்கு எச்சரிக்கை?



சவுதி, அக். 26–

சவுதி அரேபியாவில் வசிக்கும் இந்தியர்கள் அந்நாட்டு சட்டங்களையும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களையும் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் குறித்த செய்திகள் வெளியாகி வரும் நிலையில், வான்வழித் தாக்குதல்கள், ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் காட்சிகள் மற்றும் சேதமடைந்த இடங்களைப் புகைப்படம் அல்லது வீடியோ எடுக்கக் கூடாது எனத் தூதரகம் எச்சரித்துள்ளது. இத்தகைய காட்சிகளைச் சமூக வலைதளங்களில் பகிர்வதும் சட்ட நடவடிக்கைக்கு வழிவகுக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பாதுகாப்பு நிலவரம் காரணமாக ரியாத், தம்மாம் நகரங்களுக்கான விமானச் சேவைகளை நவம்பர் 7–ம் தேதி வரையிலும், ஜெட்டாவுக்கான சேவைகளை அக்டோபர் 31–ம் தேதி வரையிலும் ரத்து செய்வதாக ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் அறிவித்துள்ளதாகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சவுதியில் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க இந்தியத் தூதரகமும், ஜெட்டாவில் உள்ள இந்தியத் துணைத் தூதரகமும் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இந்தியர்கள் அந்நாட்டு அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, பாதுகாப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பு: விமானச் சேவை ரத்து மற்றும் பாதுகாப்பு நிலவரம் குறித்த தகவல்களைப் பயணத்திற்கு முன் சம்பந்தப்பட்ட விமான நிறுவனங்களின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளில் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

## சட்டப்பேரவைகளுக்கு ஒரே மாதிரி விதிகள்!



தில்லி, அக். 26–

நாடு முழுவதும் உள்ள சட்டப்பேரவைகளின் நடைமுறைகள் மற்றும் அலுவல் செயல்பாடுகளுக்கு ஒரே மாதிரியான விதிகளை உருவாக்குவது தொடர்பாக, தில்லி சட்டப்பேரவையில் அக். 27–ம் தேதி பேரவைத் தலைவர்கள் குழுக் கூட்டம் நடைபெறுகிறது. மக்களவைத் தலைவர் அமைத்துள்ள இக்குழுவின் கூட்டத்தில் உத்தரப் பிரதேசம், நாகாலாந்து, மகாராஷ்டிரம், இமாசலப் பிரதேசம், கர்நாடகம் மற்றும் தில்லி ஆகிய மாநிலங்களின் சட்டப்பேரவைத் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

கூட்டத்தில், மாதிரி விதிகள் தொடர்பான வரைவு அறிக்கை ஆய்வு செய்யப்படுவதுடன், பரிந்துரைகள் குறித்தும் விவாதிக்கப்படும். அனைத்து சட்டப்பேரவைகளுக்கும் பொதுவான நடைமுறைக் கட்டமைப்பை உருவாக்க ஒருமித்த கருத்தை எட்டுவது, விதிகளை இறுதி செய்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் ஆகியவை குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளன.

இந்தக் கூட்டம் சட்டப்பேரவைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும், ஜனநாயக மரபுகளை வலுப்படுத்தவும் உதவும் என தில்லி சட்டப்பேரவைத் தலைவர் விஜேந்தர் குப்தா தெரிவித்துள்ளார்.

## கொட்டும் மழையிலும் பெண்கள் கண்டன முழக்கம்!




ராமநாதபுரம், அக். 26–

இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி, எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மகளிரணி (விம்) சார்பில் ராமநாதபுரம் சந்தைத் திடலில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, ராமநாதபுரம் மாவட்ட எஸ்.டி.பி.ஐ. மகளிரணி தலைவர் ரம்ஜான் பேகம் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் ஜெமீலு நிஷா, மாவட்ட பொதுச்செயலாளர் சுலைமான் ஆகியோர் கண்டன உரையாற்றினர். அமைப்பின் பொதுச்செயலாளர் அப்துல் ஜெமீல் கண்டன உரை நிகழ்த்தினார். இதில், மாவட்ட செயற்குழு உறுப்பினர் நஜ்முதீன், ராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதித் தலைவர் பீர் மைதீன், தொகுதிச் செயலாளர் அக்பர் அலி, திருவாடானை சட்டமன்றத் தொகுதித் தலைவர் அனீப் தொகுதி துணை தலைவர் மூர்த்தி தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட தலைவர் அஷரப் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் மகளிரணியினர் கலந்து கொண்டனர். மழையிலும் குடைபிடித்தபடி பங்கேற்ற பெண்கள், தேர்தல் ஆணையருக்கு எதிராகக் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

## மஹாராஷ்டிராவில் "ஐஏஎஸ் சிங்கம்" துக்காராம் முண்டே அதிரடி!



மஹாராஷ்டிரா உணவுப் பாதுகாப்புத் துறை ஆணையர் துக்காராம் முண்டே

மஹாராஷ்டிரா, அக்,. 26–

மஹாராஷ்டிரா உணவு பாதுகாப்பு துறை ஆணையராக பொறுப்பேற்ற முதல் நாளில் இருந்தே துக்காராம் முண்டே பல்வேறு அதிரடி நடவடிக்கையை எடுத்து வருகிறார். செய்திகளில் பரவலாக பேசப்படுகிறார். நேர்மையை பாராட்டி மக்கள் இவரை 'ஐஏஎஸ் சிங்கம்' என்று அழைக்கின்றனர்.

தீபாவளியை முன்னிட்டு, தலைமையில் அதிரடி சோதனை நடத்தப்பட்டது. இதில் ரூ.16.92 கோடி மதிப்பிலான தரமற்ற உணவுப் பொருட்கள், குட்கா மற்றும் காலாவதிப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், 8,392 கிலோ காலாவதி உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. விதி மீறிய 68 நிறுவனங்களின் உரி மங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. 22 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

## "தவெக ஆட்சி செருப்பாட்சி!" லியோனி சர்ச்சைப் பேச்சு!



சென்னை, அக். 26–

சென்னையில் முன்னாள் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். குடும்பத் திருமண விழாவில் பேசிய திமுக நிர்வாகி திண்டுக்கல் லியோனி, தவெக ஆட்சியைச் செருப்புடன் ஒப்பிட்டுப் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

"ராமனின் செருப்பு அயோத்தியை ஆண்டதைப் போல, நீங்கள் கழற்றி வைத்த செருப்புதான் இன்று நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறது. மகளிர் உரிமைத்தொகை, காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களால் மக்கள் தொடர்ந்து பயனடைகின்றனர்" என்று அவர் குறிப்பிட்டார். மேலும், "இந்த ஆட்சி 14 ஆண்டுகள் நீடிக்காது; 14 வாரங்களோ, 14 மாதங்களோ தான் நீடிக்கும். மீண்டும் உதயசூரியன் உதிக்கும்" என்றும் அவர் பேசியுள்ளார்.

## டிஜிட்டல் பரிவர்த்தனைகள் அதிகரித்தும் ரூபாய் நோட்டுகள் புழக்கம் புதிய உச்சம்!

புதுடெல்லி, அக். 26–

இந்தியாவில் புழக்கத்தில் உள்ள ரூபாய் நோட்டுகளின் மதிப்பு ரூ.43.46 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இது கடந்த 5 ஆண்டுகளில் பதிவான அதிகபட்ச வளர்ச்சி என்று ரிசர்வ் வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள் ஊக்குவிக்கப்பட்டு வரும் நிலையில், நாட்டில் ரூபாய் நோட்டுகளின் புழக்கமும் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து ரிசர்வ் வங்கியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த அக்டோபர் 15–ம் தேதி நிலவரப்படி, நாட்டில் புழக்கத்தில் உள்ள ரூபாய் நோட்டுகளின் மதிப்பு 13.5 சதவீதம் அதிகரித்து ரூ.43.46 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் பதிவான அதிகபட்ச அளவு இதுவாகும்.

இந்தப் பணப்புழக்க வளர்ச்சிக்கு, வெளிநாடுகளில் இருந்து வங்கிகள் திரட்டிய டாலர் முதலீடுகள் முக்கியக் காரணமாக இருந்தன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கேது தசை: 9 கிரகங்களின் பலன்கள்!

கேது தசையில் நவகிரகங்களின் புத்தி காலங்கள்

| எண் | மகாதசை | புத்தி | கால அளவு |
|---|---|---|---|
| 1 | கேது | கேது 4 மாதம் | 27 நாட்கள் |
| 2 | கேது | சுக்கிரன் | 1 ஆண்டு 2 மாதங்கள் |
| 3 | கேது | சூரியன் | 4 மாதம் 6 நாட்கள் |
| 4 | கேது | சந்திரன் | 7 மாதங்கள் |
| 5 | கேது | செவ்வாய் | 4 மாதம் 27 நாட்கள் |
| 6 | கேது | ராகு | 1 ஆண்டு 18 நாட்கள் |
| 7 | கேது | குரு | 11 மாதம் 6 நாட்கள் |
| 8 | கேது | சனி | 1 ஆண்டு 1 மாதம் 9 நாட்கள் |

கேதுவின் மகா தசையானது 7 ஆண்டுகள் ஆகும். ஒருவருக்கு எந்த மகா தசை தொடங்குகிறதோ, அதே கிரகத்தின் புத்தி காலம் தான் முதலில் தொடங்கும். அந்த விதத்தில் ஏழு ஆண்டுகள் கொண்ட கேது மகா தசை தொடங்கும் போது அதன் முதல் புத்தி காலமாக கேது தொடங்கி தொடர்ந்து, சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு, குரு, சனி, புதன் ஆகிய மற்ற 9 கிரகங்களின் அந்தர்தசைகளும் (புத்தி) வரிசையாக நடக்கும். இந்த காலங்களில் சுப அல்லது அசுப பலன்களை பெறக்கூடியதாக இருக்கும்.

அது மட்டும் இல்லாமல் ஜாதகத்தில் இந்த கேதுவின் நிலையை பார்த்து, அது தரக்கூடிய தசாபுத்தி பலன்கள் அடிப்படையில் பலன்கள் கணிக்கப்படுகின்றன.

**கேது தசா + கேது புத்தி காலம் தரும் பலன்கள்**

ஜோதிட விதிகளின்படி கேது தசா கேது 4 மாதங்கள் 27 நாட்கள் வரை நடக்கக் கூடியது. ஒருவருடைய ஜாதகத்தில் 3, 6, 11 ஆக்கிய ஏதேனும் ஒரு இடத்தில் கேது இருந்தால் சுப பலன்களை தரக்கூடியவராக இருப்பார். கேது கிரகம் வலுவாக இருக்கும் போது அவர் ஆன்மீகம், துறவு, தியானம், மர்மமான விஷயங்களில் மீது மிகவும் ஆர்வம் காட்டுவார். அந்த நபர் உலக பற்றுகளிலிருந்து விலக தொடங்குவார்.

பலவீனமான அல்லது அசுபமான நிலையில் கேது இருந்தால் அவர் தனிமை, குழப்பம், முடிவெடுக்க இயலாத நிலை மற்றும் மனதில் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வு அதிகமாக இருக்கும்.

**கேது தசை + சுக்கிரன் புத்தி காலம்**

1 ஆண்டு 2 மாதங்கள் வரை கேது தசை + சுக்கிரன் புத்தி காலம் நடக்கும்.

செல்வம் சேர்த்தல், அறிவு, ஆற்றல் பெருகக்கூடிய காலமாக இருக்கும். இந்த காலத்தில் சுகபோகத்திற்கும், ஆன்மீகத்திற்கும் இடையில் போராட்டமான காலமாக இருக்கும். கலை, அழகு, வாகனம் வாங்கு, சொ மிதின், நிதி ஆதாயங்கள் வெளிநாட்டு பயணங்கள் செல்வதற்கான வாய்ப்புகள் உண்டு. கேதுவும் சந்திரனும் பாதிக்கப்பட்டு இருந்தால் திருமண வாழ்க்கையில் கருத்து வேறுபாடுகள், உங்களுடைய குண நலனில் மாற்றம், தேவையற்ற செலவுகள்

**கேது தசை + சூரியன் புத்தி காலம்**

நான்கு மாதம் ஏழு நாட்கள் நடக்கும் கேது தசை, சூரிய புத்தி நடக்கக்கூடிய காலத்தில் ஒருவர் சுயமரியாதை மீது அதிகம் ஆர்வம் காட்டுவார். உபதேசம், அதிகாரம் ஒன்று விஷயங்களில் ஈடுபடுவார். அந்த நபருக்கு சூரியன் வலுவாக இருந்தால் அந்த காலத்தில் திடீர் பதவி உயர்வு, நிர்வாக பலன்கள், தந்தையின் ஆதரவு மற்றும் பணியிடத்தில் மரியாதை கிடைக்க கூடியதாக இருக்கும். அதே சமயம் கேதுவோ அல்லது சூரியனோ பலவீனமாக இருந்தால் அவருக்கு மரியாதை இழப்பு, தந்தையின் உடல் நல பாதிப்பு தொடர்பான கவலை, அரசாங்க விஷயங்களில் சில சிக்கல்களை சந்திக்க நேரிடலாம்.

**கேது தசை + சந்திரன் புத்தி காலம்**

ஒருவருக்கு ஏழு மாதங்கள் கேது தசா, சந்திரன் புத்தி நடக்கும் காலத்தில் ஒரு நபர் மனரீதியாக உணர்ச்சிமிக்க நபராகவும், கொந்தளிப்பான காலமாகும் அமையலாம். இந்த காலத்தில் தீமைகள் வந்தாலும் தானாக விலகக் கூடிய காலமாக இருக்கும்.

ஒரு நபருடைய ஜாதகத்தில் சந்திரன் உச்சத்தில் அல்லது சுப இடத்தில் இருந்தால் அவருக்கு மன அமைதி, குடியரசு தொழிலில் வெற்றி கிடைப்பது மற்றும் தாயின் மூலம் நன்மைகள் என அற்புத பலனை தருவார்கள்.

அதுவே சந்திரன் பலவீனமாக இருக்கும்போது அந்த நபருக்கு மன அமைதியின்மை, தேவையற்ற பயம் பதற்றம், மன அழுத்தம், சோர்வுஉள்ளிட்ட பிரச்சனைகளை சந்திக்க நேரிடும்.

**கேது தசை + செவ்வாய் புத்தி காலம்**

மாதங்கள் 27 நடக்கும் கேது தசை, செவ்வாய் புத்தி காலத்தில் ஒருவருடைய ஆற்றல் அதிகமாக இருக்கும். அதே சமயம் ஆக்ரோஷமாகவும், கடினமான முடிவுகளை எடுக்க வேண்டிய காலமாக அமையும். போறாத காலமாக இருக்கும்.

செவ்வாய் சாதகமான பலன் தரக்கூடிய நிலையில் இருந்தால் அவருக்கு வீடு, நில அல்லது அசையா சொத்துக்கள் மூலம் ஆதாயம் கிடைப்பது மற்றும் எதிரிகளை சமாளித்து வெற்றி பெறுவது என நன்மைகள் கிடைக்கும்.

அதே சமயம் செவ்வாய் அசுபமாக என நிலையில் இருந்தால் அவர் கவனக்குறைவால் ஏற்படக்கூடிய விபத்துகள் சந்திக்க நேரிடும். சகோதரருடன் தகராறு, அர்த்தம் தொடர்பான கோளாறு ஏற்படலாம். கோபத்தால் பிரச்சனைகளை சந்திப்பார்கள்.

**கேது தசை + ராகு புத்தி காலம்**

1 ஆண்டு 18 நாட்கள் வரை நடக்கக்கூடிய கேது தசா + ராகு புத்தி காலத்தில் மிகவும் மரணமான மற்றும் குழப்பமான காலமாக இருக்கும். நல்ல செயல்கள் எதுவும் நடக்காது.

கேது சாதகமான இடத்தில் இருந்தால் அவருக்கு திடீரென பெரிய மாற்றங்கள் நல்லது வெளிநாட்டு தொடர்புகள் மூலம் நன்மைகள் கிடைக்கலாம்.

அதுவே சுகமான நிலையில் இருந்தால் அதீதமான குழப்பம், பிரச்சினைகளுக்கு தீர்வு காண இயலாத நிலை மற்றும் பொருள் ஆசை அதிகரிக்கும். தனிமையான சூழலால் கடினமான போராட்டத்தை சந்திப்பார்கள்.

**கேது தசை + குரு புத்தி காலம்**

11 மாதம் 6 நாட்கள் மறை நடக்கக்கூடிய கேது தசை + குரு புத்தி காலத்தில் திருமணம் நடைபெறும். செல்வம் சேர்வது, குருவின் உபதேசம் கிடைப்பது போன்ற நன்மை வாய்க்கக் கூடிய காலமாக இருக்கும். அறிவு பெருகக்கூடியதாகவும், ஆன்மீகத்தின் மீது நாட்டமும் ஏற்படும். பெற்றோர், குருவிடமிருந்து ஆசிர்வாதம் கிடைக்கும். குழந்தைகளால் மகிழ்ச்சியும், வாழ்க்கையில் சிலரின் சரியான வழிகாட்டுதலை கிடைக்கப்பெறுவார்கள். செல்வம், மரியாதையும் அதிகரிக்கும்

**கேது தசை + சனி புத்தி காலம்**

1 ஆண்டு 1 மாதம் 9 நாட்கள் வரை நடக்கக்கூடிய கேது தசை + சனி புத்தி காலத்தில் பொதுவாக இடம் மாறுவீர்கள். உடல் நோய் வந்து விலகும்.

சனி சாதகமாக அமைந்திருந்தால் உபதேச காலமாகவும், கடின உழைப்பால் செயல்களில் வெற்றி, உங்களுடைய வாழ்க்கையில் தூய்மைப்படுத்துதல் போன்ற விஷயங்கள் நடக்கும். ஒழுக்கமான உழைப்பால் நீண்ட கால நன்மைகளையும், நிலைத்தன்மையான செல்வத்தை பெறுவார்கள்.

அதுவே சனி ஜாதகமற்ற நிலையில் இருந்தால் சவால்கள் அதிகரிப்பதும், வேலையில் தடை ஏற்படுவது, மன அழுத்தமும், மூட்டு வலியும் அதிகரிக்கும்.

கேது தசை + புதன் புத்தி காலம்

11 மாதம் 27 நாட்கள் ஒரே நடக்கக்கூடிய கேது தசை+ புதன் புத்தி காலத்தில் பொதுவாக பகை , கல்வி பாதியில் நிற்கும். எண்ணிய செயல் நடந்தேறாது.

புதன் வலுவான நிலையில் இருந்தால் அவருக்கு பேச்சில் சாமர்த்தியம், படிப்பு, எழுத்து, வணிகம், புதிய திட்டங்கள் மூலம் வெற்றி கிடைக்கும்.

புதன் சாதகம் அற்ற நிலையில் இருந்தால் முடிவெடுப்பதில் குழப்பமும், சிறிய அளவில் நரம்பு தொடர்பான பிரச்சனைகள் சந்திப்பார்கள்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# பெண்களுக்கு டிமென்ஷியா பாதிப்பு அதிகம்!



ஆண்களைவிட பெண்களுக்கு டிமென்ஷியா எனப்படும் ஞாபக மறதி நோய் ஏற்படும் விகிதம் அதிகமாக இருப்பதாகப் புதிய உலகளாவிய ஆய்வு தெரிவித்துள்ளது.

ஜாமா நியூராலஜி இதழில் வெளியான ஆய்வில், 18 நாடுகள் மற்றும் 5 பிராந்தியங்களைச் சேர்ந்த 38,418 பேரின் தரவுகள் ஆய்வு செய்யப்பட்டன. இதில் 3,001 பேருக்கு டிமென்ஷியா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.

ஆண்டுக்கு 1,000 பெண்களில் 10.6 பேருக்கும், ஆண்களில் 8.6 பேருக்கும் இந்நோய் ஏற்படுவதாக ஆய்வு கூறுகிறது. பெண்களின் நீண்ட ஆயுட்காலம், ஹார்மோன் மாற்றங்கள், கல்வி மற்றும் சமூகச் சூழல்கள் உள்ளிட்டவை இதற்குக் காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனினும், இதற்கான முழுமையான காரணங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

உடற்பயிற்சி, ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துதல், புகைப்பழக்கத்தைத் தவிர்த்தல் ஆகியவை மூளை ஆரோக்கியத்தைப் பாதுகாக்க உதவும். தொடர்ந்து நினைவாற்றல் குறைதல் அல்லது குழப்பம் ஏற்பட்டால் மருத்துவரை அணுகுவது அவசியம்.

# எந்த பொருட்கள் உற்பத்தியையும் நிறுத்தவில்லை - ஆவின் நிறுவனம் விளக்கம்...!

சென்னை, அக். 26–

'ஆவின்' நிறுவனம் பனீர் உள்பட 100 பொருட்களின் உற்பத்தியை நிறுத்திவிட்டதாக வெளியான தகவலுக்கு அந்த நிறுவனம் மறுப்பு தெரிவித்துள்ளது. ஆவின் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறிருப்பதாவது:–

ஆவின் நிறுவனத்தில் தயாரிக்கப்படும் எந்தவொரு பொருளின் உற்பத்தியும் முழுமையாக நிறுத்தப்படவில்லை. நெய், வெண்ணெய், பனீர், குக்கீஸ் உள்ளிட்ட அனைத்து வகையான பால் பொருட்களும் வழக்கம்போல் தயாரிக்கப்பட்டு விற்பனை நிலையங்களுக்கும், சில்லறை விற்பனை முகவர்களுக்கும் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

தயிர், லஸ்ஸி, பனீர் உள்ளிட்ட முக்கியப் பால் பொருட்களின் விற்பனை, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுமார் 15 முதல் 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. ஆவின் பால் பொருட்களுக்கு நுகர்வோரிடையே தொடர்ந்து அதிகரித்து வரும் வரவேற்பை பிரதிபலிக்கிறது. எனவே, ஆவின் பால் பொருட்களின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான கியுள்ள செய்திகள் உண்மைக்கு மாறானவை. பொதுமக்கள் இத்தகைய தவறான தகவல்களை நம்ப வேண்டாம். ஆவின் நிறுவனம், தரமான பால் மற்றும் பால் பொருட்களைத் தொடர்ந்து தயாரித்து, நுகர்வோரின் தேவைக்கேற்ப வினியோகம் செய்து வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



## சினிமா துளிகள்..!

# நடிகர் அஜித்துக்கு கோவில்... உருவச் சிலைக்கு பால் அபிஷேகம்!



சென்னையை அடுத்த மாங்காடு அருகே உள்ள கோவூரில் நடிகர் அஜித்குமாருக்கு முழு உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது. அஜித்தை முன்னிறுத்திச் செயல்பட்டு வரும் 'அனைத்து நண்பர்கள் முன்னேற்ற கழகம்' சார்பில் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

கோவூரில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்துக்கு, அதன் தலைவர் பாபு தலைமை தாங்கினார். இதில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அஜித் ரசிகர்கள், கட்சி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியில், அஜித்குமாரின் முழு உருவச் சிலையை கட்சித் தலைவர் பாபு திறந்து வைத்தார். தொடர்ந்து, சிலைக்குப் பால் அபிஷேகம் செய்து, மாலை அணிவித்து ஆரத்தி எடுத்து வழிபட்டனர். மேலும், 108 தேங்காய்களை உடைத்தும் தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர். அப்போது, நடிகர் அஜித்குமார் அரசியலுக்கு வர வேண்டும் என்றும் கட்சியினர் அழைப்பு விடுத்தனர்.

இதற்கிடையே, கோவூரில் 3 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் நடிகர் அஜித்குமாருக்காகப் பிரத்யேகமாகக் கோவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகக் கட்சித் தலைவர் பாபு தெரிவித்துள்ளார்.

திரைப்பட நட்சத்திரங்களின் பிறந்தநாள், பட வெளியீடு உள்ளிட்ட நிகழ்வுகளைக் கொண்டாடும் ரசிகர்கள், தற்போது அஜித்துக்கு முழு உருவச் சிலை நிறுவி, கோவில் அமைக்கவும் திட்டமிட்டிருப்பது கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த அறிவிப்பு அஜித் ரசிகர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# உருவானது "அர்னாப் புயல்"!



சென்னை, அக். 26–

மத்திய கிழக்கு வங்கக் கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுவடைந்தது.

மத்திய கிழக்கு மற்றும் அதை யொட்டிய தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுப்பெற்று, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அதே பகுதிகளில் நிலவியது. இது தென்கிழக்கு திசையில் நகர்ந்து ஞாயிற்றுக்கிழமை காலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மத்திய கிழக்கு மற்றும் அதையொட்டிய தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவியது. இது தெற்கு திசையில் நகர்ந்து வலுப்பெற்று, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, திங்கள்கிழமை (அக். 26) காலை 5.30 மணிக்கு மத்திய கிழக்கு அதையொட்டிய மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் புயலாக உருவாகி யுள்ளது. இதற்கு அர்னாப்' புயல் என பெயரிடப்பட்டுள்ளது.

மணிக்கு 15 கி.மீ. வேகத்தில் நகரும் 'அர்னாப்' புயல் வடமேற்கு திசையில் நகர்ந்து படிப்படியாக வலுவடைந்து தீவிரப் புயலாகவும், மிக தீவிரப் புயலாகவும் வலுவடைந்து ஆந்திர கடலோரப் பகுதிகளுக்கு அருகில் மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளை அடையக்கூடும். ஆந்திர பிரதேசம் மற்றும் ஏனாம் கடற்கரைப் பகுதிகளில், பாபட்லா–விசாகப்பட்டினம் இடையே மிக தீவிர புயலாக புதன்கிழமை (அக். 28) அதிகாலை கரையைக் கடக்கக்கூடும். 'அர்னாப்' கரையைக் கடக்கும்போது காற்றின் வேகம் 140 கி.மீ. வரை அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அர்னாப் புயலால் தமிழகத்திற்கு மழை பாதிப்பு இருக்காது. டெல்டா மாவட்டங்கள் திங்கள் மாலை வரை மழை தொடர வாய்ப்புள்ளது.

# கே.என். நேரு தாக்கல் செய்த மனு தள்ளுபடி!



சென்னை, அக். 26–

நகராட்சி துறை அதிகாரிகள் நியமனத்தில் முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிவு செய்யும்படி, லஞ்ச ஒழிப்புத் துறைக்கு பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி, முன்னாள் அமைச்சர் நேரு தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து, சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கடந்த திமுக ஆட்சி காலத்தில் நகராட்சி நிர்வாக துறையில், 2,538 உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் நியமனத்துக்கு 634 கோடி ரூபாய் லஞ்சம் பெறப்பட்டுள்ளதாகவும், இதுசம்பந்தமாக வழக்குப்பதிவு செய்ய ம்படி, தமிழக டிஜிபி–க்கு, அமலாக்கத் துறை கடிதம் அனுப்பியிருந்தது.

இந்த கடிதத்தின் அடிப்படையில், வழக்குப்பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிடக் கோரி அதிமுக எம்.பி. ஐ.எஸ்.இன்பதுரை தாக்கல் செய்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், அமலாக்கத் துறை கடிதத்தின் அடிப்படையில் உடனடியாக வழக்குப் பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு கடந்த பிப்ரவரி மாதம் உத்தரவிட்டிருந்தது.

தனது தரப்பு வாதங்களை கேட்காமல் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி முன்னாள் அமைச்சர் நேரு தாக்கல் செய்த மனுவை, தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு விசாரித்தது.

நேரு தரப்பில், தனது தரப்பு வாதங்களை கேட்காமல் வழக்குப்பதிவு செய்ய உத்தரவிடப்பட்டதால் தனது உரிமை பாதிக்கப்பட்டுள்ளது. வழக்குப்பதிவு செய்ய பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி முந்தைய ஆட்சியில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை, தற்போதைய அரசு வாபஸ் பெற முடிவாது எனவும், அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை எனவும் வாதிடப்பட்டது.

தமிழக அரசுத்தரப்பில், அதிகாரிகள் நியமன முறைகேடு தொடர்பாக ஆதாரங்களுடன் அமலாக்கத் துறை கடிதம் எழுதியும், முந்தைய திமுக அரசு, எந்த நடவடிக்கையும் எடுக்காமல், முன்னாள் அமைச்சர் நேரு–வை பாதுகாத்தது வழக்குப்பதிவு செய்ய கோரிய வழக்கில், நேருவுக்கு நோட்டீஸ் அனுப்பியும், அந்த அவகாசத்தை பயன்படுத்தாமல், பதிலளிக்க அவகாசம் வழங்கவில்லை என இந்த மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், வழக்குப்பதிவு செய்யும்படி பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி நேரு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த தலைமை நீதிபதி அமர்வு, உத்தரவை மறு ஆய்வு செய்ய மறுத்து, நேருவின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

# வரும் கோடையில் தமிழகத்தில் மின் பற்றாக்குறை ஏற்படும்! - மின்வாரியம்!!



சென்னை, அக். 26–

தமிழகத்தில் வரும் 2027–ம் ஆண்டு கோடை காலத்தில் மின் தேவை அதிகரிக்கும் நிலையில், தினமும் 3,610 மெகாவாட் முதல் 7,971 மெகாவாட் வரை மின் பற்றாக்குறை ஏற்படும் என மின்வாரியம் மதிப்பீடு செய்துள்ளது.

தமிழகத்தின் தினசரி சராசரி மின் தேவை சுமார் 16,000 மெகாவாட்டாக உள்ளது. கோடை காலத்தில் வெப்பத்தின் தாக்கம் அதிகரிப்பதால், மின் தேவை 20,000 மெகாவாட்டைக் கடக்கிறது. இந்த ஆண்டு கோடை காலத்தில் மின் தேவை 21,000 மெகாவாட்டாக அதிகரித்தது. கடந்த ஜூலை 14–ம் தேதி மின் தேவை 21,714 மெகாவாட்டாக உயர்ந்து புதிய உச்சத்தை எட்டியது.

கோடை காலம் முடிந்த பின்னரும் கடந்த மாதம் வரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால், தினசரி மின் தேவை சுமார் 20,500 மெகாவாட்டாக நீடித்தது.

அதிகரித்த மின் தேவையைப் பூர்த்தி செய்யத் தேவையான அளவுக்கு மின்சாரம் கிடைக்காததால், சுமார் 2,000 மெகாவாட் பற்றாக்குறை ஏற்பட்டது. இதையடுத்து, மின்வாரியம் வெளி ச்சந்தையில் குறுகிய கால அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்தது.

அப்போது ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை ரூ.35 வரை இருந்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், வரும் 2027–ம் ஆண்டு கோடை காலத்தில் தமிழகத்தின் மின் தேவை 23,672 மெகாவாட்டாக அதிகரிக்கும் என மின்வாரியம் கணித்துள்ளது. குறிப்பாக, காலை மற்றும் மாலை நேரங்களில் மின் பயன்பாடு உச்சத்தை எட்டும். அந்த நேரங்களில் மின் தேவைக்கும் கிடைக்கும் மின்சாரத்துக்கும் இடையே தினமும் 3,610 மெகாவாட் முதல் 7,971 மெகாவாட் வரை பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்படும் மின் பற்றாக்குறையைச் சமாளிக்கும் வகையில், குறுகிய கால ஒப்பந்தங்களின் கீழ் 3,200 மெகாவாட் மின்சாரத்தையும், நீண்ட கால அடிப்படையில் 1,500 மெகாவாட் மின்சாரத்தையும் கொள்முதல் செய்ய மின்வாரியம் முடிவு செய்துள்ளது.

குறுகிய கால மின்சாரக் கொள்முதல் என்பது ஒரு நாள் முதல் ஓராண்டு வரையிலான ஒப்பந்தங்களைக் குறிக்கும். நீண்ட கால ஒப்பந்தங்கள் என்பது 5 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரையிலான கால அளவைக் கொண்டதாகும்.

வரும் கோடை காலத்தில் அதிகரிக்கக்கூடிய மின் தேவையைச் சமாளித்து, தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்கான முன்னேற்பாடுகளில் மின்வாரியம் ஈடுபட்டுள்ளது.

# கிராமிய கலைகளுக்கு கோவில்களில் முக்கியத்துவம் - அமைச்சர் ரமேஷ்!



சென்னை, அக். 26–

சென்னையில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை கமிஷனர் அலுவல கத்தில் ஒருங்கிணைந்த கோவில் மேலாண்மைத் திட்டம், திருப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு இந்து சமய அறநிலை யத்துறை அமைச்சர் ரமேஷ் தலைமை தாங்கி பேசினார்.

அப்போது அவர், 'கோவில்களுக்கு சொந்தமான ரூ.112.95 கோடி மதிப்பிலான 105.14 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டு ள்ளன. கிராமத்தெய்வங்கள் எழுந்தருளி யுள்ள கோவில் வளாகங்கள், பாரம்பரிய பழக்கவழக்கங்கள், பண்பாடு, கலாசாரம், இறை உணர்வு மற்றும் வாழ்வியல் மரபுகளுக்கு ஏற்ப, சட்டசபையில் அறிவித்தபடி கிராமிய கலைநிகழ்ச்சிகளை விரைவாக தொடங்கி நடத்தி அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்க வேண்டும்' என்றார்.

கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை கமிஷனர் டாக்டர் டி.ஜி.வினய், கூடுதல் கமிஷனர்கள் துரை ரவிச்சந்திரன், த. ரத்னா, பொ.ஜெயராமன் உள் ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

# நியூசிலாந்துக்கு எதிரான 3-வது டி20 போட்டியிலிருந்து இஷான் கிஷன் விலகல்!



புதுடெல்லி, அக். 26–

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டி20 போட்டியிலும் இந்திய வீரர் இஷான் கிஷன் விளையாட மாட்டார் என்று பிசிசிஐ அறிவித்துள்ளது. இந்திய அணி நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு டி20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் விளையாடி வருகிறது. இதுவரை இரு டி20 போட்டிகள் முடிவடைந்திருக்கும் நிலையில், இந்திய அணி 2–0 என்ற புள்ளிக் கணக்கில் முன்னிலையில் உள்ளது. கடந்த அக். 22 ஆம் தேதி கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்ற முதல் டி20 போட்டியில் இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் இஷான் கிஷனுக்கு இடுப்புப் பகுதியில் தசைப்பிடிப்பு ஏற்பட்டது.

இந்த தசைப்பிடிப்பிலிருந்து குணமடையாத நிலையில், இரண்டாவது போட்டியில் இஷான் கிஷன் விளையாட வில்லை. இந்த நிலையில், வெலிங்டனில் நாளை (அக். 27) நடைபெறவுள்ள மூன்றாவது டி20 போட்டியிலும் இஷான் கிஷன் விளையாட மாட்டார் என்று பிசிசிஐ இன்று தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பிசிசிஐ வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: "நியூசிலாந்துக்கு எதிரான தொடரின் முதல் டி20 போட்டியில், வலது தொடை இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட லேசான தசைப்பிடிப்பிலிருந்து இஷான் கிஷன் குணமடைந்து வருகிறார். அவர் இன்னும் முழுமையான உடல் தகுதியை எட்டவில்லை என்பதால், அக்டோபர் 27, 2026 அன்று வெலிங்டனில் நடைபெறவுள்ள மூன்றாவது டி20 போட்டியில் அவர் பங்கேற்க மாட்டார். பிசிசிஐ மருத்துவக் குழுவினர் அவரது உடல்நிலை முன்னேற்றத்தைக் கண்காணித்து வருகின்றனர்.

மூன்றாவது டி20 போட்டிக்காகவும் குமார் குஷாக்ரா அணியுடன் தொடர்ந்து நீடிப்பார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## தமிழகத்தில் 1,146 அப்ரண்டிஸ் பணிகள்!

தமிழக அரசின் மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மற்றும் என்.எல்.சி. இந்தியா நிறுவனம் சார்பில் மொத்தம் 1,146 அப்ரண்டீஸ் பயிற்சிப் பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பயிற்சிக் காலம் ஓராண்டு. விண்ணப்பங்கள் இணையதளம் வழியாகப் பெறப்படுகின்றன.

**1. மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் 79 அப்ரண்டீஸ் பணிகள்!**

மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் 79 அப்ரண்டீஸ் பணியிடங்கள் சென்னையில் நிரப்பப்பட உள்ளன. இதற்கு விண்ணப்பிக்க கடைசி நாள் அக்டோபர் 29. விவரங்களுக்கு https://nats.education.gov.in/boat-srp.php என்ற இணையதளத்தைப் பார்க்கலாம்.

**2. என்.எல்.சி. நிறுவனத்தில் 1,067 அப்ரண்டீஸ் பணிகள்!**

என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தில் 1,067 பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் ஐ.டி.ஐ. முடித்தவர்களுக்கான தொழிற்பயிற்சி அப்ரண்டீஸ் மற்றும் பொறியியல் அல்லாத பட்டதாரி அப்ரண்டீஸ் பணியிடங்கள் அடங்கும். நெய்வேலி மற்றும் சென்னை மண்டலத்தில் பயிற்சி வழங்கப்படும். விண்ணப்பிக்க கடைசி நாள் நவம்பர் 9, மாலை 5 மணி. மேலும் விவரங்களுக்கு https://www.nlcindia.in/ என்ற இணையதளத்தை அணுகலாம்.

விண்ணப்பதாரர்கள் தகுதி, தேர்வு முறை மற்றும் தேவையான சான்றிதழ்கள் குறித்த விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்த்து, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

# தங்கம் விலை உயர்வு!



சென்னை, அக். 26–

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 120 உயர்ந்து, ஒரு சவரன் ரூ. 1,04,680–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, கிராமுக்கு ரூ. 15 உயர்ந்து ஒரு கிராம் ஆபரணத் தங்கம் ரூ. 13,085–க்கு விற்பனையாகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை உயர்ந்தபோதிலும், வெள்ளி விலையில் இன்று எந்தவித மாற்றமும் இன்றி நேற்றைய விலையிலேயே நீடிக்கிறது. ஒரு கிராம் வெள்ளி ரூ.220க்கும், ஒரு கிலோ ரூ.2,20,000 க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# 9 துறைமுகங்களில் 2ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்!



சென்னை, அக். 26–

அர்னாப் புயல் உருவான நிலையில் தமிழ்நாடு, புதுச்சேரியில் 9 துறைமுகங்களில் 2ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தீவிரமடைந்து 'அர்னாப்' புயலாக திங்கள்கிழமை மாறியுள்ளது. இந்த புயல் மேலும் வலுவடைந்து ஆந்திரம் – ஒடிசா கடற்கரையை நோக்கி நகர்ந்து கரையை கடக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இதன் காரணமாகத் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஆந்திர கடலோரப் பகுதி களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அர்னாப் புயல் உருவான நிலையில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 9 முக்கிய துறைமுகங்களில் 2–ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

மேலும் தென்கிழக்கு–தென்மேற்கு வங்கக்கடல், மன்னார் வளைகுடா மற்றும் தமிழக–புதுச்சேரி கடலோரப் பகுதிகளுக்கு மீனவர்கள் மறுஅறிவிப்பு வரும் வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டு ள்ளனர். ஆழ்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் மீனவர்கள் உடனடியாக அருகிலுள்ள பாதுகாப்பான துறைமுகங்கள் அல்லது கரைப்பகுதிகளுக்குத் திரும்புமாறு கேட்டுக்கொள்ள ப்பட்டுள்ளனர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# இனி பள்ளிகளுக்கு விடுமுறையில்லை; மழைக்குத்தான் விடுமுறை!

சென்னை, அக். 26–

வங்கக் கடலில் அர்னாப் புயல் உருவாகியிருக்கிறது என்று செய்தியைக் கேட்ட தமிழக பள்ளி மாணவர்கள் பலரும் இந்த வாரம் முழுக்க பள்ளிகளுக்கு விடுமுறை கிடைக்கும் என்று மகிழ்ந்திருக்கலாம்.




ஆனால், தமிழ்நாடு வெதர்மேன் என அறியப்படும் பிரதீப் ஜான் வெளியிட்டிருக்கும் தகவல், அவர்களது மகிழ்ச்சியில் மண்ணை அள்ளிப் போட்டிருக்கிறது. காரணம். இனி தமிழ்நாட்டுக்கு மழையில்லை என்ற தகவல்தான்.

பொதுவாக, மழையைப் பொழியும் மழை மேகங்களை விட, பிரதீப் ஜான் முகநூல் பக்கத்தைத்தான் பலரும் எப்போது மழை என்று சொல்வார் என பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், அவரே இப்படி சொல்லிவிட்டாரே என்று பலரும் மனம் நொந்து போயிருக்கலாம்.

இன்று காலை மழை நிலவரம் குறித்து பிரதீப் ஜான் தன்னுடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் கூறியிருப்பது என்னவென்றால், அரபிக் கடலில் உருவான தாழ்வு மண்டலம் தற்போது டெல்டா / வட இலங்கை கடற்கரைக்கு அப்பால் உள்ளது இதனால் நாளை முதல் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவும். தமிழகம் முழுவதும் பெரும்பாலும் மழையின் தாக்கம் குறைய வாய்ப்புள்ளது. நாகப்பட்டினம், திருவாரூர், ராமநாதபுரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை மாவட்டத்தின் சில பகுதிகள், கடலூர் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது; இருப்பினும், மாலை நேரத்திற்குப் பிறகு மழையின் அளவு படிப்படியாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வட இலங்கையில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும்.

இந்தத் தாழ்வு மண்டலம் முன்னதாக சென்னை புதுச்சேரி கடற்கரைக்கு அருகில் அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதனால், அக். 25, 26ஆம் தேதிகளில் கனமழை பெய்யும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், இது தெற்கு நோக்கி நகர்ந்து டெல்டா / இலங்கை கடற்கரை பகுதியை நோக்கிச் சென்றுவிட்டது. இதன் விளைவாக, அந்தப் பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்புள்ள நிலையில், சென்னையில் எதிர்பார்க்கப்பட்ட மழை முற்றிலும் கிடைக்கவில்லை.

அக். 27ஆம் தேதி (நாளை) நண்பகல் முதல் தமிழகம் முழுவதும் வறண்ட வானிலை நிலவும்; ‘அர்னாப்’ (Arnab) புயல் கிழக்கு திசைக் காற்றைத் தன்னுடன் ஈர்த்துச் செல்வதால், தமிழகத்தில் பரவலாக பெய்து வரும் மழை முற்றிலும் நின்றுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று பதிவிட்டுள்ளார். எனவே, தீபாவளிக்கு கடை வீதிகளுக்குச் செல்ல திட்டமிட்டிருந்தவர்கள். நவம்பர் ஒன்றாம் தேதி வரை மழை விடுமுறை விட்டிருக்கும் இந்த நாள்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் க.விக்னேஷ், திண்டுக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி தலைமையில், நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் இரா.அய்யனார் முன்னிலையில், கொடைக்கானல் வட்டத்திற்குட்ட அடுக்கம் மலைச்சாலை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு பணிகள் தொடர்பாக நேரில் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எஸ்.சாந்தி, தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) ரமேஷ், கோட்ட பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) விஜயக்குமார், கொடைக்கானல் கோட்டாட்சியர்(பொ) பிரபாகரன், கொடைக்கானல் வட்டாட்சியர் நந்தகோபால் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கொடைக்கானல் நகர் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட பகுதிகளை உடனடியாக சரி செய்ய வேண்டி பழனி சட்டமன்ற உறுப்பினர் ரவி மனோகரன் தலைமையில் அனைத்து பகுதிகளிலும் நேரடியாக சென்று பார்வையிட்டபோது, உடன் கொடைக்கானல் கோட்டாட்சியர், கொடைக்கானல் வட்டாட்சியர், கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர், கொடைக்கானல் காவல்துறை ஆய்வாளர், கொடைக்கானல் நகர் மன்ற தலைவர், நகர மன்ற துணைத் தலைவர், கொடைக்கானல் நகர் மன்ற உறுப்பினர்களும், கொடைக்கானல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அவர்களும், மற்றும் பொதுமக்களுடன் கலந்து கொண்டு ஆய்வுகள் மேற்கொண்டு, தீர்வுக்கு ஏற்பாடுகள் செய்தனர்.

# கட்டாரப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச்சுவர் மற்றும் காவிரி குடிநீர் வசதி ஏற்படுத்தி தர வேண்டும்: பொதுமக்கள் கோரிக்கை!

கரூர்,அக் 26–

கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் ஒன்றியம் கட்டாரப் பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் 192 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இங்கு போர்வெல் மூலம் குடிநீர் உப்புத்தன்மை இருப்பதால் மாணவ மாணவிகள் குடிநீராக பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பள்ளிக்கு செல்லும் பாதையானது சுமார் 4 அடி அகலம் மட்டுமே இருப்பதால் சைக்கிள் செல்வதற்கு போதுமானதாக இல்லை. இதில் மழை நீர் தேங்குகிறது. பள்ளிக்கு சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தால் குடிமகன்கள் அட்டகாசம் தொடர்கிறது. பள்ளிகாகு வரும் சாலை மண் சாலையாக இருப்பதால் தற்போது சேறும் சகதியுமாக உள்ளது. இதனால் மாணவர்கள் மூன்று கிமி தொலைவு சுற்றி வருகின்றனர்.



எனவே மேற்கண்ட கோரிக்கைகளை மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கரூர் மாவட்ட நாம் தமிழர் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம்!

கரூர்அக் 26–

கரூர் தலைமை தபால் நிலையம் அருகில் கரூர் மாவட்ட நாம் தமிழர் கட்சியின் சார்பில் தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் கார்த்திகா உள்ளிட்ட 12 நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளை விஜய் தலைமையிலான தவெக அரசு பொய் வழக்கு பதிவு செய்து கைது செய்யப்பட்டதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்திற்கு நாம் தமிழர் கட்சியின் மாநில தகவல் தொழில்நுட்ப பாசறை செயலாளர் கரூர் செங்குட்டுவன் தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் மாநில வழக்கறிஞர் பாசறை செயலாளர் வழக்கறிஞர் செல்வ.நன்மாறன் அவர்கள் கண்டன உரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாநில மருத்துவர் பாசறை செயலாளர் மருத்துவர் கருப்பையா, மேற்கு மாவட்ட தலைவர் மைக்கேல், அரவக்குறிச்சி தொகுதி செயலாளர் மகேந்திரன், குளித்தலை தொகுதி செயலாளர் தமிழ்ச்செல்வன்,

மாநில மகளிர் பாசறைச் செயலாளர் கவிதா, வீரத்தமிழர் முன்னணி மாநில பொறுப்பாளர்கள் சேகர், முனியப்பன், பிரேம் குமார், பூபதி, கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் அபூர்வா, கவியரசு, அஸ்ரத், நாகராஜ், மனோஜ் குமார் உள்ளிட்ட நாம் தமிழர் கட்சியினர் கலந்துகொண்டனர்.

# பிரேஸில் அதிபர் தேர்தலில் 4-வது முறையாக வெற்றி பெற்ற லூலா: உலக தலைவர்கள் வாழ்த்து!

பிரேஸில், அக். 26–

பிரேஸில் அதிபர் தேர்தலில் 4–ஆவது முறையாக வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்று அதிபர் பதவியைக் கைப்பற்றிய 80 வயதான தற்போதைய அதிபர் லூலா டாசில்வாவுக்கு லத்தீன் அமெரிக்கா மற்றும் உலகத் தலைவர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர். பல தலைவர்கள் ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன், இந்த தென் அமெரிக்க நாட்டுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதாகவும் உறுதியளித்துள்ளனர்.



பிரதமர் நரேந்திரமோடி: லூலா டாசில்வாவுக்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் நரேந்திர மோடி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில் பிரதமர் மோடி தெரிவித்திருப்பதாவது:

“என் அன்பு நண்பர், அதிபர் லூலா பெற்ற மகத்தான தேர்தல் வெற்றிக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள். நாம் இணைந்து, பல்வேறு துறைகளில் நமது ஒத்துழைப்பைத் தொடர்ந்து வலுப்படுத்துவோம். தெற்குலகில் பகிரப்பட்ட முன்னுரிமைகளை முன்னெடுத்துச் செல்வோம். மேலும் அனைவரையும் உள்ளடக்கிய, சமத்துவமான மற்றும் நிலையான ஒரு உலகத்தை நோக்கிப் பணியாற்றுவோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

மெக்சிகோ அதிபர் கிளாடியா ஷெய்ன்பாம்: “ஜனநாயகம் வாழ்க! பிரேஸில் மக்கள் வெற்றி பெற்றுள்ளனர். அதிபர் லூலாவுக்கு வாழ்த்துகள்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

பொலிவிய அதிபர் ரோட்ரிகோ பாஸ் பெரேரா: “அதிபர் லூலாவிற்கு எனது வாழ்த்துகள். பொலிவியாவும் பிரேஸிலும் அண்டை நாடுகளாகவும், சகோதர நாடுகளாகவும் உள்ளன; இவை பொதுவான வரலாறு மற்றும் சவால்களைக் கொண்டுள்ளன. நமது உறவை மேலும் வலுப்படுத்தவும், இரு நாடுகளுக்கும் கூடுதல் வாய்ப்புகளை உருவாக்கவும் நாம் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவோம்.” என வாழ்த்தியுள்ளார்.

பராகுவே அதிபர் சாண்டியாகோ பென்யா: பிரேஸில் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லுலாவிற்கு வாழ்த்துகள். இந்த மகத்தான ஜனநாயக திருவிழாவில் பங்கேற்ற பிரேஸில் மக்களுக்கு எனது வணக்கங்கள். பராகுவேயும் பிரேசிலும் ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான பொதுவான இலக்குகளைக் கொண்டுள்ளன. மக்களின் நலனுக்காக நாம் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவோம் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனட்டர் பெர்னி சாண்டர்ஸ்: பிரேஸில் அதிபர் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்ற லுலாவிற்கு வாழ்த்துகள்.

மேலும், “லுலா பிரேஸில் தொழிலாளர்கள் மற்றும் ஜனநாயகத்திற்காகவும் உறுதியாக நின்றவர்; வரும் நான்கு ஆண்டுகளிலும் அவர் தொடர்ந்து அவ்வாறே செயல்படுவார்” என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கனடா பிரதமர் மார்க் கார்னி: பிரேசில் அதிபராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட லுலாவிற்கு வாழ்த்துகள். கனடா மற்றும் பிரேஸில் இடையிலான உறவு, நமது கூட்டாண்மையின் கீழ் சிறப்பாக வளர்ந்துள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இந்த உறவை மேலும் வலுப்படுத்துவோம். இதன் மூலம் புதிய வர்த்தக வாய்ப்புகளை உருவாக்குவோம், சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம், இரு நாட்டு மக்களுக்கும் அதிக வளத்தை ஏற்படுத்தித் தருவோம் என்று அவர் கூறினார்.

குவாத்தமாலா அதிபர் பெர்னார்டோ அரேவாலோ: தேர்தலில் பெரும் வெற்றி பெற்று மீண்டும் பிரேசில் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள லுலாவிற்கு வாழ்த்துகள். அத்துடன், தங்கள் ஜனநாயக நிறுவனங்களை உறுதிப்படுத்தும் வகையில் மிகச் சிறந்த தேர்தல் செயல்முறையை முன்னெடுத்த பிரேஸில் மக்களுக்கும் வாழ்த்துகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

குவாத்தமாலாவும் பிரேஸிலும் ஒரு பொதுவான நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்கின்றன. அதாவது, அரசாங்கமானது பொது நலனுக்காகச் செயல்பட வேண்டும், வரலாற்று ரீதியாக ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும், ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டும் மற்றும் மிகவும் நீதியான சமூகங்களை உருவாக்க வேண்டும் என்பதே அந்த நம்பிக்கை.

“லுலா, உங்கள் புதிய பதவிக்காலத்தில், இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான பிணைப்பை மேலும் வலுப்படுத்த நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம்,” என்று அவர் கூறினார்.

உருகுவே அதிபர் யமண்டு ஓர்சி: தேர்தல் முடிவுகள் வெளியானதும் லுலாவிடம் தொலைபேசியில் பேசி, அவரது வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்த யமண்டு ஓர்சி, ‘எக்ஸ்’ பக்கத்தில், “பிரேஸில் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபரும் எனது நண்பருமான லூலா டாசில்வாவிடம் சற்று முன்புதான் தொலைபேசியில் பேசினேன்.”

“அவரது வெற்றிக்கும், ஒரு தேர்தல் செயல்முறை என்பது ஜனநாயகத்தைக் கொண்டாடும் நிகழ்வாக அமைந்ததற்கும் நான் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தேன்,” என்று அவர் மேலும் கூறினார்.

லுலாவின் இந்த வெற்றி, ஒரு குறிப்பிடத்தக்க அரசியல் மீள்வருகையாகும். இடதுசாரித் தலைவரான இவர், இதற்கு முன்பு போல்சோனாரோவிடம் தோல்வியடைந்திருந்த நிலையில், தற்போது தொடர்ந்து நான்காவது முறையாக அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, எந்த வேட்பாளரும் வெற்றிக்குத் தேவையான பெரும்பான்மையைப் பெறாததால், தேர்தல் இரண்டாம் சுற்றுக்குச் சென்றிருந்தது.

லூலாடா சில்வா ஏற்கெனவே 2003, 2006, 2022 ஆகிய ஆண்டுகளில் பிரேஸில் அதிபராகப் பொறுப்பேற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பூரில் முக்குலத்தின் முப்பெரும் விழா..!

திருப்பூர், அக். 26–

திருப்பூரில் தென்னாடு மக்கள் கட்சி மாநில பொதுச் செயலாளர் காளிமுத்து தேவர் தலைமையில் முக்குலத்தின் முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் அக்கட்சி நிறுவனத் தலைவர் முகவை மாவீரன் கணேஷ் தேவர் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தலைவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி அன்னதானத்தை துவக்கி வைத்தார் இந்த நிகழ்வில்




திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் ராம் குமார் அகில இந்திய பார்வர்டு பிளாக் பொதுச் செயலாளர் காளிமுத்து, பாரதிய ஜனதா கட்சியின் வடக்கு மாவட்டத் தலைவர் சீனிவாசன். பசும்பொன் தேசிய கழகம் சார்பில் முருகன். முத்துக்குமார்.காசிராஜன் கண்ணன்.முக்குலத்தோர் தேசிய கழகம் தலைவர் எஸ் பி ராஜா தேவர். பசும்பொன் பக்தர்கள் பேரவை நிறுவன தலைவர் ராயல் லட்சுமணன்.உள்ளிட்ட பல்வேறு கட்சி மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு, சிறப்பித்தனர் இதில் தென்னாடு மக்கள் கட்சி சார்பில் மாநில பொதுக்குழு உறுப்பினர் செந்தில் குமார் தேவர். மாவட்ட செயலாளர் குமார். மாநில இளைஞர் அணி பொதுச் செயலாளர் தீனா. மாவட்ட தலைவர் உக்கிர பாண்டியண்.மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஆப்பிராய் செந்தில். பழனிச்சாமி. கார்மேகம். உதயகுமார். வினோத். வீரமணி. வேல்முருகன். அருணா. பாண்டியன். ராமமூர்த்தி. முத்துக்குமார். உள்ளிட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்..

# ஸ்டாலினிடம் சீனியர்கள் குமுறல்!

சென்னை, அக். 26–

‘அறிக்கை அரசியலை கைவிட்டு, எதிர்க்கட்சி தலைவர் உதயநிதியை களத்துக்கு வர சொல்லுங்கள். இல்லையென்றால் தி.மு.க.,வை வளர்க்க முடியாது,’ என, தி.மு.க., தலைவர் ஸ்டாலினிடம், அக்கட்சி மூத்த நிர்வாகிகள் கூறியதாக, தகவல் வெளியாகி உள்ளது.



சட்டசபை தேர்தலில், சென்னை கொளத்துார் தொகுதியில், ஸ்டாலின் தோல்வி அடைந்தார். உடல்நிலை காரணமாக, கட்சி சீரமைப்பு பணிக்காக, ஊர் ஊராக, அவரால் செல்ல முடியவில்லை. அந்த பணிகளை, உதயநிதி கவனிக்காமல், வீட்டிலேயே இருக்கிறார். மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில், வெற்றி வாய்ப்பு இருந்தபோதிலும், முதல்வர் விஜய் தெருத்தெருவாக சென்று ஓட்டு கேட்டார். ஆனால், உதயநிதியோ காரை விட்டு இறங்காமல் பிரசாரம் செய்தார்.

கடந்த 3ம் தேதி, இடைத்தேர்தல் பிரசாரத்தை முடித்து, வீட்டுக்குள் சென்றவர், வெளியே வரவில்லை. இது கட்சி மூத்த நிர்வாகிகளிடம், அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. அவரை களத்திற்கு அனுப்புமாறு ஸ்டாலினிடம் வலிறுத்தி உள்ளனர்.

தி.மு.க., முன்னாள் அமைச்சர்கள் சிலர் கூறியதாவது: மின்கட்டணம், விலைவாசி உயர்வு, சட்டம் ஒழுங்கு என ஏராளமான பிரச்னைகள் உள்ளன. இதற்கு, உதயநிதியிடம் இமிருந்து கேலி, கிண்டலுடன் அறிக்கைகள் மட்டும் வருகின்றன; களத்தில் இறங்க மறுக்கிறார். ஆளுங்கட்சிக்கு எதிராக வெறும் குற்றச்சாட்டை கூறினால் போதுமா; பிரச்னைகளுக்கு எதிராக போராடவிட்டால், மக்கள் எப்படி நம்புவர்.

இது குறித்து கேட்டால், ‘விஜய், வீதிக்கு வந்தா ஜெயிச்சாரு. வீட்டில் இருந்து தானே அரசியல் செஞ்சாரு’ என, தன்னை விஜயுடன் ஒப்பிடுகிறார். தி.மு.க.,வினர் வீட்டு நிகழ்ச்சிகளுக்கு சென்றதை எல்லாம் சுட்டிக்காட்டுவதோடு, ‘சட்டசபையில் என்னமா பேசினார் பாத்திங்கல்ல’ என உதயநிதியுடன் இருப்போர் கூறுகின்றனர்.

தன்னை போலவே, இளைஞர் அணியையும் உதயநிதி வைத்திருக்கிறார். வெறுமென அறிக்கை, ‘எடிட்’ செய்யப்பட்ட வீடியோக்களை, சமூக வலைதளங்களில், ‘ஷேர்’ செய்தால், இளைஞர்களை கவர்ந்து விடலாம் என, தப்புக்கணக்கு போடுகிறார். உதயநிதியின் நடவடிக்கை, ஸ்டாலினுக்கும் பிடிக்கவில்லை. உதயநிதி இப்படியே இருந்தால், கட்சியை வளர்க்க முடியாது என, மூத்த நிர்வாகிகளான, முன்னாள் அமைச்சர்கள் சிலர், ஸ்டாலினிடம் நேரடியாக ஆதங்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020